Australian Government

# National Redress Scheme

நிறுவனங்களில் இருந்த காலத்தில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்பட்டவர்களுக்கானது

# ‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’ த்தைப் பற்றி விளங்கிக்கொள்ளல்

Tamil



# பொருளடக்கம்

இக்கையேடு பற்றி ........ 4

‘தேசிய குறைதீர்ப்புத் திட்டம்’ பற்றி ........ 6

குறைதீர்ப்பு என்றால் என்ன? ........ 6

குறைதீர்ப்பிற்கு யார் தகுதி பெறுவார்கள்? ........ 7

குறைதீர்ப்பிற்கு விண்ணப்பித்தல் ........ 8

குறைதீர்ப்பு வழங்கீடொன்றைப் பெற்றுக்கொள்ள எவ்வளவு காலம் எடுக்கும்? ........ 9

‘குறைதீர்ப்பு ஆதரவுதவிச் சேவைகள்’ யாவை? ........ 10

நிறுவனங்களைப் பொறுப்பேற்கச் செய்வது ........ 11

சட்ட நடவடிக்கைக்குப் பதிலான ஒரு மாற்றீடு ........ 13

தேசிய குறைதீர்ப்புத் திட்டத்தை யார் நடத்துகிறார்கள்? ........ 15

‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’ த்தின் கீழ் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் எவ்வாறு வரையறுக்கப்படுகிறது? ........ 16

# இக்கையேடு பற்றி

இந்தக் கையேடு, ஆஸ்திரேலியாவில் உள்ள ‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’ த்திற்கு விண்ணப்பிக்க விரும்பும் 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையோருக்கானது.

‘தேசிய குறைதீர்ப்புத் திட்டம்’ உங்களுக்கானதா, அது என்ன வழங்குகிறது, அதற்கு எப்படி விண்ணப்பிப்பது, எப்படி உதவியைப் பெறுவது என்பனவற்றைத் தீர்மானிக்க உதவும் தகவல்களை இக்கையேடு வழங்குகிறது.

**மன உளைச்சலை ஏற்படுத்தக்கூடுமான பல தகவல்கள் இக்கையேட்டில் உள்ளன.**

உங்களுக்கு உடனடி உதவி தேவைப்பட்டால், தொடர்பு கொள்க:

**Blue Knot Foundation** – 1300 657 380

**Beyond Blue** – 1300 224 636

**Care Leavers Australasia Network** – 1800 008 774

**Full Stop Australia** – 1800 385 578

**Lifeline** – 13 11 14

**MensLine Australia** – 1300 789 978

**1800RESPECT** – 1800 737 732

ஆஸ்திரேலிய நிறுவனங்களில் பல சிறுவர்கள் பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டனர் என்பதை ‘தேசிய குறைதீர்ப்புத் திட்டம்’ **ஒப்புக்கொள்கிறது**.

இத் துஷ்பிரயோகத்தின் காரணமாக நீடித்திருக்கும் துன்பங்களை அது **ஏற்றுக்கொள்கிறது**, மற்றும் அத் துஷ்பிரயோகத்திற்கு குறித்த நிறுவனங்களைப் **பொறுப்பேற்கச்** செய்கிறது.

## ‘தேசிய குறைதீர்ப்புத் திட்டம்’ பற்றி

சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகம் குறித்து நிறுவனங்கள் அளித்த மறுமொழிகளை ஆய்வுசெய்த ‘ரோயல் கமிஷ’ னின் பரிந்துரைகளை அடுத்து ஆஸ்திரேலிய அரசாங்கம் ‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’த்தை 2018-ஆம் ஆண்டில் ஏற்படுத்தியது.

ஐந்து ஆண்டுகளில், ‘ராயல் கமிஷன்’ 16,000 க்கும் மேற்பட்ட துணிச்சலான நபர்களிடமிருந்து அவர்களின் அனுபவங்களைக் கேட்டறிந்தது. அமைப்புகளின் பராமரிப்பகங்களில் தாம் இருந்தபோது தமக்கு நடந்த பாலியல் துஷ்பிரயோகம் பற்றிய அனுபவங்களை அவர்கள் பகிர்ந்து கொண்டனர்.

## குறைதீர்ப்பு என்றால் என்ன?

குறைதீர்ப்பு என்பது நிறுவனங்களில் இருந்தபோது சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு ஆளானவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை ஒப்புக்கொள்வதோடு குறித்த நிறுவனங்களை அத் துஷ்பிரயோகத்திற்குப் பொறுப்பேற்கச் செய்வதுமாகும்.

ஒரு காகித விண்ணப்பப் படிவத்தை நிரப்புவதன் மூலமோ அல்லது myGov வழியாக ‘ஆன்லைன்’ மூலமோ மக்கள் ‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’த்திற்கு விண்ணப்பிக்கலாம்.

ஒரு ‘குறைதீர்ப்புத் திட்ட’ வழங்கீட்டில் பின்வருவன உள்ளடங்கலாம்:

- **ஒரு பணக் கொடுப்பனவு**
- **அந்தரங்கத் தன்மை வாய்ந்ததும் கலாசார ரீதியாக பாதுகாப்பானதுமான அறிவுரையாலோசனை**
- **ஒரு நிறுவனத்திடமிருந்து மன்னிப்பு கோரல் போன்ற நேரடியான தனிப்பட்ட பதில்.**

குறைதீர்ப்புத் திட்டத்தின் எந்தப் பகுதிகளை நீங்கள் பெற வேண்டும் என்பதை நீங்கள் தெரிவு செய்யலாம்.

## குறைதீர்ப்புத் திட்டத்திற்கு யார் விண்ணப்பிக்கலாம்?

**பின்வருவன பொருந்துமாயின் ‘குறைதீர்ப்புத் திட்ட’த்திற்கு நீங்கள் விண்ணப்பிக்க முடியும்:**

- நீங்கள் **18 வயதுக்கு கீழ்ப்பட்டவராக** இருந்த போது பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்பட்டிருந்தால், மற்றும்
- நீங்கள் **2010 ஜூன் 30** -இற்கு முன் பிறந்திருந்தால், மற்றும்
- **2018 ஜூலை 1** இற்கு முன்பு நீங்கள் ஒரு நிறுவனத்தில் இருந்தபோது துஷ்பிரயோகம் இடம்பெற்றிருந்தால், மற்றும்
- நீங்கள் ‘குறைதீர்ப்புத் திட்ட’ த்திற்கு விண்ணப்பிக்கும் வேளையில் ஒரு **ஆஸ்திரேலியப் பிரஜையாக** அல்லது நிரந்தரக் குடியிருப்பாளராக இருந்தால்.

### தகுதி பற்றிய கூடுதல் தகவல்கள்

தகுதி பற்றிய விரிவான தகவல்களை நீங்கள் இங்கே காணலாம்:
nationalredress.gov.au/applying/who-can-apply

## குறைதீர்ப்பிற்கு விண்ணப்பித்தல்

ஒரு காகிதப் படிவத்தின் மூலம் அல்லது ‘ஆன்லைன்’ விண்ணப்பப் படிவத்தை நிரப்புவதன் மூலம் மக்கள் தேசிய குறைதீர்ப்புத் திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம், அல்லது அவர்கள் ஒரு தொழில்-வல்லுநரால் பரிந்துரைக்கப்படலாம்.

விண்ணப்பிப்பதைப் பற்றி யாரிடமாவது பேசுவதும், விண்ணப்பப் படிவத்தை நிரப்புவதில் அல்லது ஒரு வழங்கீட்டைப் பரிசீலிப்பதில் எவரிடமிருந்தேனும் உதவி பெறுவதும் பலருக்கும் பயனுள்ளதாக இருக்கலாம்.

**நீங்கள் myGov மூலமாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ இணைய வழியில் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து தாக்கல் செய்யலாம்.**

**ஒரு விண்ணப்பப் படிவத்தை நிரப்ப உங்களுக்கு உதவுமாறு நீங்கள் நம்பும் ஒருவரைக் கேட்கலாம் அல்லது உங்கள் சார்பாக விண்ணப்பிக்க யாராவதொருவரைப் பரிந்துரைக்கலாம்.**

**உங்களுக்கு வசதியான ஒரு நேரத்தில் விண்ணப்பத்தை நீங்கள் நிரப்பலாம்.**

**2027 ஜூன் 30 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.**

### விண்ணப்பத்தைத் தொடங்குவதற்கு முன்பான ஆலோசனை

‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’ த்திற்கு விண்ணப்பிப்பது சம்பந்தப்பட்ட விடயங்களைப் பற்றி மேலும் இங்கே அறிந்து கொள்ளலாம்:

nationalredress.gov.au/applying/start-continue-application

## குறைதீர்ப்பு வழங்கீடொன்றைப் பெற எவ்வளவு காலம் எடுக்கும்?

ஒவ்வொரு நபரின் சூழ்நிலைகளும் வித்தியாசமாக இருப்பதால், விண்ணப்பிப்பதற்கும், குறைதீர்ப்பு வழங்கிட்டைப் பெறுவதற்கும் எடுக்கும் நேரம் ஒவ்வொருவருக்கும் வேறுபடும்.

**ஒரு விண்ணப்பத்தைச் செயலாக்குவதற்காக சராசரி 12 மாத காலமோ, அதிலும் கூடிய காலமோ ஆகலாம்.**

**உங்கள் விண்ணப்பத்தில் முடிந்த அளவு அதிக தகவல்களைச் சேர்ப்பதைப் பொறுத்து செயலாக்க நேரம் குறையலாம்.**

**'குறைதீர்ப்பு ஆதரவுதவி சேவைகள்' கிடைப்பதோடு, இக் கால நேரம் நெடுக அந்தரங்கத்தன்மை வாய்ந்த, உணர்ச்சிபூர்வமான மற்றும் நடைமுறை ரீதியான ஆதரவுதவியை அவை வழங்கும்.**

## ‘குறைதீர்ப்பு ஆதரவுதவி சேவைகள்’ யாவை?

‘குறைதீர்ப்பு ஆதரவுதவி சேவைகள்’ இலவசமானதும் சுயாதீனமானதுமாகும், மற்றும் உணர்ச்சிபூர்வமான நடைமுறை ரீதியான ஆதரவுதவியை அவை வழங்குகின்றன.

| அவர்களால் முடியுமானவை: |
| --- |
| • நீங்கள் பேசுவதற்குறிய ஒருவராக இருத்தல் |
| • தகுதி பற்றிய தகவல்களை வழங்குதல் மற்றும் பிற விருப்பத் தெரிவுகள் பற்றிக் கலந்துரையாடல் |
| • விண்ணப்பத்தை நிரப்ப உங்களுக்கு உதவுதல் |
| • உங்கள் சார்பாக ‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’ த்துடன் பேசுதல். |

மாற்றுத்திறனாளிகள், பராமரிப்பில் இருந்து வெளியேறியவர்கள் மற்றும் சிறுவராய் இருக்கும்போது புலம்பெயர்ந்தவர்கள் உட்பட கலாச்சார ரீதியாக வேறுபட்ட பின்னணியைச் சேர்ந்தவர்களுக்கு சிறப்புத் தேர்ச்சி பெற்றோரின் சேவைகள் கிடைக்கின்றன.

இலவச, அந்தரங்க சட்ட ஆதரவுதவி மற்றும் நிதி ஆலோசனையை ‘knowmore சட்ட சேவை’ வழங்குகிறது.

### உங்களுக்கு அருகிலுள்ள ‘குறைதீர்ப்பு ஆதரவுதவி சேவைக’ளைக் கண்டறியவும்

உங்கள் மாநிலத்திலோ, டெரிட்டரிப் பிரதேசத்திலோ கிடைக்கும் ‘குறைதீர்ப்பு ஆதரவுதவி சேவைக’ ளின் பட்டியலை நீங்கள் இங்கே பார்க்கலாம்:

nationalredress.gov.au/support/explore

## நிறுவனங்களைப் பொறுப்பேற்கச் செய்தல்

சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகத்திற்கு பொறுப்பான நிறுவனங்களை ‘தேசிய குறைதீர்ப்பு திட்டம்’ பொறுப்பேற்கச் செய்யும்.

**ஒரு நிறுவனம் என்பது ஒரு பாடசாலை, தேவாலயம், மசூதி, கோயில், யூத வழிபாட்டுத்தலம், சமய பரப்பு தளம், அனாதை இல்லம், வளர்ப்புப் பராமரிப்பகம், மருத்துவமனை, தடுப்பு மையம் அல்லது விளையாட்டுக் குழுவாக இருக்கலாம்.**



ஒரு நிறுவனத்தின் வளாகத்தில் பாலியல் துஷ்பிரயோகம் நடந்த தருணங்கள் அல்லது முகாம் போன்ற நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட செயல்பாடொன்றின் போது துஷ்பிரயோகம் நடந்த தருணங்கள் ஆகியன இதில் அடங்கும்.

சிறுவர்களோடு கலந்து செயலாற்றும் வரலாற்றைக் கொண்ட அனைத்து நிறுவனங்களையும் ‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’ த்தில் சேரும்படி ஆஸ்திரேலிய அரசாங்கம் வலுவாக ஊக்குவிக்கிறது.

குறைதீர்ப்பிற்கு விண்ணப்பிக்கும் நபர், ஏற்கனவே ‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’ த்தில் சேராத ஒரு நிறுவனத்தின் பெயரைச் சொன்னால், அந்த நிறுவனம் பதிவு செய்யப்படுவதற்காக ஆறு மாதங்கள் அவகாசம் அளிக்கப்படும்.

அந்நிறுவனம் ஆறு மாதங்களுக்குள் சேரவில்லை என்றால், அவர்கள் பகிரங்கமாகப் பெயர் குறிப்பிடப்படவும், நிதி அபராதங்களை எதிர்கொள்ளவும் நேரிடும். மேலும், அவர்கள் சேரும் வரை அவர்களின் அறக்கட்டளை அந்தஸ்தை இழக்கவும் நேரிடும்.

### இத் திட்டத்தில் சேர்ந்துள்ள நிறுவனங்கள் யாவை என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்

ஒரு நிறுவனம் ‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’ த்தில் சேர்ந்துள்ளதா என்பதை நீங்கள் இங்கே தேடிப் பார்க்கலாம்: nationalredress.gov.au/institutions/search

“நான் என் வாழ்க்கையின் ஒரு பகுதியை அடைத்துவிட்டேன், இறுதியாக என்னால் புதியதொரு கட்டத்திக்குச் செல்ல முடிகிறது. எனக்கு என்ன நேர்ந்தது என்பதன் வலியை இது போக்கவில்லை, ஆனால் ஏதோ ஒன்று ஆறிவிட்டது.”

**ஜெஸ்ஸி, மீண்டு வாழ்பவர்**

## சட்ட நடவடிக்கைக்குப் பதிலான ஒரு மாற்றீடு

'தேசிய குறைதீர்ப்புத் திட்டம்' என்பது ஒரு நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலான மாற்றீடாகும்.

நீங்கள் 'தேசிய குறைதீர்ப்புத் திட்ட'த்திற்கு விண்ணப்பிக்கும் போது, தேவைப்படும் சான்றுகளின் அளவு நீதிமன்றங்களுக்குத் தேவைப்படுவதை விட குறைவாக இருக்கும், மேலும் குறிப்பிட்ட நிறுவனத்துடன் உங்களுக்கு நேரடித் தொடர்பு இருக்காது.

குறைதீர்ப்பிற்காக விண்ணப்பிப்பதற்கும் நீதிமன்றங்களில் சிவில் உரிமை கோருவதற்கும் உள்ள முக்கிய வேறுபாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| 'தேசிய குறைதீர்ப்புத் திட்டம்' | நீதிமன்றங்கள் மூலமான சிவில் கோரிக்கை |
|---|---|
| விண்ணப்பப் படிவம் | சிக்கலான செயல்முறை |
| ஒரு மன்னிப்பு பெறலாம் | ஒரு மன்னிப்பு பெறலாம் |
| செயலாக்கக் காலம் முழுவதும் இலவசமானதும், அந்தரங்கமானதுமான 'குறைதீர்ப்பு ஆதரவுதவிச் சேவைகள்' கிடைக்கும் | சூழ்நிலைகளைப் பொறுத்து ஆதரவுதவிச் சேவைகள் கிடைக்கலாம் |
| அதிகபட்ச இழப்பீட்டுத் தொகை $150,000* | இழப்பீட்டிற்கு வரம்பு இல்லை |
| Centrelink கொடுப்பனவுகளில் பாதிப்பு ஒன்றை ஏற்படுத்தலாம் | Centrelink கொடுப்பனவுகளில் பாதிப்பு ஒன்றை ஏற்படுத்தலாம் |
| விண்ணப்பம் இலவசமானது | சட்ட செலவுகள் இருக்கலாம் |
| சட்டத் தரம் குறைந்த சான்றே தேவைப்படும் | உயர் சட்டத் தரம் வாய்ந்த சான்று தேவைப்படும் |

*துஷ்பிரயோகத்தின் வகையைப் பொறுத்து $10,000 க்கும் குறைவான தொகையிலிருந்து அதிகபட்சம் $150,000 வரை குறைதீர்ப்புக் கொடுப்பனவுகள் இருக்கும்.

“முன் வந்து பேசுங்கள். ஒருவரிடம் பேசி, ‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’த்தின் ஊடாகச் செல்லுங்கள். உங்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றிய உண்மையான அங்கீகாரத்தைப் பெறுங்கள்.”

**மார்ட்டின், மீண்டு வாழ்பவர்**

## ‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’ த்தை யார் நடத்துகிறார்கள்?

‘தேசிய குறைதீர்ப்புத் திட்டம்’ ‘ஆஸ்திரேலிய சமூக சேவைத் திணைக்கள’ த்தினால் நடத்தப்படுகிறது, ஆனால் ஒரு சுயாதீன முடிவெடுப்பாளர் விண்ணப்பங்களைப் பரிசீலித்து, முடிவைத் தீர்மானித்து மதிப்பாய்வுகளை மேற்கொள்வார்.

சுயாதீன முடிவெடுப்பாளர்கள் சமூக நலன், வழக்கு மேலாண்மை மற்றும் சட்டம் உட்பட பல்வேறுபட்ட பின்னணியில் இருந்து வரும் மிகவும் அனுபவம் வாய்ந்த, மதிப்பிற்குரிய நபர்களாவர்.

### சுயாதீன முடிவெடுப்பாளர்கள்

சுயாதீன முடிவெடுப்பாளர்களைப் பற்றி நீங்கள் மேலும் இங்கே தெரிந்துகொள்ளலாம்:

nationalredress.gov.au/applying/what-happens-next/independent-decision-makers

## ‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’ த்தின் கீழ் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் எவ்வாறு வரையறுக்கப்படுகிறது?

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் என்பது 18 வயதிற்குக் கீழ்ப்பட்ட ஒருவரை அவர் புரிந்து கொள்ளாத நிலையில், சமூக வரையறைகளுக்கு முரணான அல்லது சட்டத்திற்கு எதிரான பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதாகும்.

**சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தில் பின் வருவன உள்ளடங்கலாம் (ஆனால் இவை மட்டும் அல்ல):**

- ஆடைக்கு மேலாக, அல்லது ஆடையற்ற நிலையில் உடலின் ஏதேனும் ஒரு பகுதியை, பாலியல் ரீதியாகத் தொடுதல்
- சிறுவர் பாலியல் செயல்கள் அல்லது ஏதேனும் பொருத்தமற்ற விஷயங்களைக் காண்பிப்பது உட்பட பாலுறவு நடவடிக்கையில் ஈடுபட ஒரு பிள்ளையைத் தயார்படுத்துதல் அல்லது ஊக்குவித்தல்
- ஒரு பிள்ளையுடன் ஏதேனும் ஒரு வகையில் பாலுறவில் ஈடுபடல்
- ஒரு பாலியல் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு ஒரு பிள்ளையை இணங்கச் செய்தல் அல்லது கட்டாயப்படுத்துதல்
- எந்தவொரு பாலினப் பிள்ளையுடனும், எந்தவொரு வயதுவந்த பாலினத்தவரும் செய்யும் பாலியல் செயற்பாடுகள்.

“குறைதீர்ப்பிற்கு விண்ணப்பிக்க மற்றவர்களை நான் ஊக்குவிக்கிறேன் - நியாயம் பெற என்றுமே தாமதம் இல்லை.”

**லானா, மீண்டு வாழ்பவர்**

# National Redress Scheme

நிறுவனங்களில் இருந்த காலத்தில் சிறுவர் பாலியல்
துஷ்பிரயோகத்திற்கு உட்பட்டவர்களுக்கானது

---

**உங்கள் விருப்பத் தெரிவுகளைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ள அல்லது 'குறைதீர்ப்பு ஆதரவுதவி சேவை' களுடன் தொடர்புகொள்ள 1800 737 377 இன்ற இலக்கத்தினை அழைக்கவும்**

திங்கள் முதல் வெள்ளி வரை,
கிழக்கு ஆஸ்திரேலிய நேரப்படி
காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை கிடைக்கும்

உங்கள் மொழியில் உதவி பெற **131 450** என்ற இலக்கத்தில் மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு சேவை' (TIS)-யை அழைக்கவும்

**அல்லது**
**nationalredress.gov.au-இற்குச் செல்லவும்**

DSS2998.0623